முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

O.S.No.677/2019 பெயர் : பிரேம் ஆனந்த் நாள் : 20.04.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க அறிவிப்பு எதுவும் வரவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதாகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும். ஆறுமுகம் சாட்சியம் அளிக்க அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். அவர் வழக்கு சங்கதிகள் பற்றி எனக்கு தெரிவித்தார். 14.03.2013 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன், சாட்சி கையொப்பம் போட யார் அழைத்தார்கள் என்றால், அம்மாசை மனைவி லட்சுமி அழைத்தார்கள். அம்மாசியின் அப்பா பெயர் புரூங்கான் என்கிற ரெங்கசாமி ஆகும். அம்மாசை உடன் பிறந்தவர்கள் பெரியராமசாமி, சின்னராமசாமி, நாகம்மாள் ஆகியோர் ஆவார்கள். இந்த வழக்கு சொத்து புரூங்கான் என்கிற ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரிதான். நான் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லியுள்ள பாகப்பிரிவினைப் பத்திரத்தில் புரூங்கான் என்கிற ரெங்கசாமியின் மக்களான சின்னராமசாமி குடும்பத்தினரும், அம்மாசையின் குடும்பத்தினர் மட்டுமே பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால், சரிதான். அது அவர்களது அனுபவத்தில் இருந்தது.புரூங்கான் என்கிற ரெங்கசாமி வழக்கு சொத்தைப் பொறுத்து, ஆவணங்கள் ஏதாவது ஏற்படுத்தியிருந்தாரா என்றால், இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் புரூங்கான் என்கிற ரெங்கசாமியின் வாரிசு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்திற்கு பின்னிட்டு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன்.

தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பி செட்யூல் சொத்துக்கள் செல்லமுத்துவுக்கும், சி செட்யூல் சொத்துக்கள் லெட்சுமிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். லட்சுமிக்கு பாப்பாள் என்ற ஒரு மகள் இருந்தார், அவருக்கு பி.வா.சா.ஆ.3 தானசெட்டில்மெண்ட் ஆவணம் லட்சுமி எழுதி வைத்தார் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்திலும், நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் லட்சுமி அவருக்கு பி செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான், ஆனால் அது அச்சு பிழையாகும். அந்த அச்சுப்பிழையை திருத்துவதற்காக லட்சுமி தரப்பில் கடந்த 12 ஆண்டுகளாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், சரிதான். செல்லமுத்துவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை லட்சுமி தனது மகளுக்கு மோசடியாக தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததற்கு, நான் துணை போயிருக்கிறேன் என்றால், செல்லமுத்துவின் சொத்து விபரம் அதில் சேர்க்கப்படவில்லை, லட்சுமியின் சொத்து விபரம் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் பெரியராமசாமியின் வாரிசுகள் என்றால், சரிதான். புரூங்கான் என்கிற ரெங்கசாமியின் மனைவி மாரியாயி ஏற்கனவே தன் மகள் நாகம்மாளுக்கு ஒரு சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்ற சங்கதி எனக்கு தெரியுமா என்றால், தெரியும். புரூங்கான் என்கிற ரெங்கசாமியின் வாரிசுகளான பெரியராமசாமியின் வாரிசுகளான வாதிகளின் பங்கினை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக பிரதிதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால், சரியல்ல, அவர்களுக்கு பிரித்துக்கொடுக்கப்பட்ட சொத்துக்களுக்கு மட்டுமே பாகப்பிரிவினை செய்துக் கொண்டார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பிரிவினை செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற சங்கதி குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை.

வாதிகளும், பிரதிவாதிகளும் எனக்கு எனது மனைவியின் வகையில் உறவினர் ஆவார்கள். பிரதிவாதிகள் 14.03.2013-ம் வருடம் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை அனுசரித்து பிரதிவாதிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தானது புரூங்கான் என்கிற ரெங்கசாமியின் 3 ஆண் வாரிசுகளின் அனுபவத்தில் தான் இன்றுவரை உள்ளது என்றால், சரியல்ல.